# ஆண்டறிக்கை

# 2013

# முகவுரை

தொழில் திணைக்களத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆய்வாண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் செயற்பணியை சுருக்கமாக விபரிக்கின்ற இந்த வெளியீடானது, தொழிற்றுறையில் ஆர்வமாக இருக்கின்றவர்களுக்கு முக்கியமான வெளியீடொன்றாகும்.

தொழில்தருநர் மற்றும் பணியாளர்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்படுகின்றவிடத்து அவற்றினைத் தீர்ப்பதன் மூலமும், தேவையானவிடத்து நீதிமன்ற நடவடிக்கைக்கு அனுப்புவதன் மூலமும் தாபனங்களில் தொழிற்றுறை அமைதியைப் பேணுவதற்கும் அவற்றினை வழிநடத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தின் அபிவிருத்தியை நோக்கிய இத்திணைக்களத்தின் பங்களிப்பினை மேற்கொள்வதற்கும் இந்த ஆண்டு காலப்பகுதியில் முடிந்திருந்தது. நாட்டில் பாரிய குழப்பத்தை ஏற்படுத்தியிருந்த, இலங்கை போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு விசேடமாக கடந்த தசாப்தத்தில் செலுத்தப்படாத பணிக்கொடைக்கொடுப்பனவு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் தொழில் திணைக்களத்திற்கு குறித்தொதுக்கப்பப்பட்டிருந்தது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்தின் மேலதிக நிலுவையைப் பயன்படுத்தி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு இந்த ஆண்டு காலப்பகுதியில் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், எதிர்வருகின்ற ஆண்டிலும் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் செலுத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது.

இத்திணைக்களத்தின் முன்னேற்ற மீளாய்வு செயற்பாடுகளை வலைய மட்டத்தில் பரவலாக்குவதன் மூலம், மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் அலுவலர்கள் தமது வலைய முன்னேற்றத்தை ஏனைய அலுவலகங்களுடன் ஒப்பிடுகின்ற வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இந்த முறைமை மூலம் போட்டித்தன்மையை உருவாக்குவதுடன், அதனூடாக சேவைநாடுவோருக்கு அதிகளவான ஆக்கத்திறனுள்ள சேவைகளை வழங்குவதனைச் சாத்தியமாக்கியிருந்தது. அதேபோன்று, மாவட்ட அலுவலகங்களின் தேவைப்பாடுகளை இனங்காண்பதனூடாக தீர்வுகளை விரைவாக எடுப்பதுவும் சாத்தியமாகியிருந்தது.

இத்திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவும் எதிர்பார்த்திருந்த இலக்குகளை அடைவதற்கு அவர்களின் முழு அளவிலான இயலுமையுடன், ஈடுபாட்டுடன் செயற்பட்டிருந்ததுடன், இதற்கு பங்களிப்புச் நல்கியிருந்த அனைத்து பணியாளர்களையும் நான் பாராட்டுகின்றேன். அத்துடன், தொழில், தொழில் உறவுகள் அமைச்சரினாலும், சர்வதேச தொழில் தாபனத்தின் கொழும்பு அலுவலகத்தினாலும் திணைக்களத்தின் செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த பங்களிப்பினை நான் நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

வி.பி.பீ.கே.வீரசிங்க
தொழில் ஆணையாளர் அதிபதி
தொழில் திணைக்களம்
தொழில் செயலகம்
கொழும்பு 05.

# பொருடக்கம்


| | |
|---|---|
| தொழில் திணைக்களம் | 01 - 01 |
| தொழிற்றுறை அமைதி | 02 - 04 |
| சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் | 05 - 06 |
| சமூகப் பாதுகாப்பு | 07 - 08 |
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 09 - 10 |
| விசேட துறைகள் | 11 - 12 |
| பொது நிருவாகம் | 13 - 14 |
| புள்ளிவிபரக் கையேடு | 15 - 19 |
| பின்னிணைப்பு | 20 - 20 |

# தொழில் திணைக்களம்

தொழில் திணைக்களத்தின் கடமையானது, தொழில்தருநர், பணியாளர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றிற்கிடையே முத்தரப்பு ஒருங்கிணைப்பிணைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதாகும்.

**வரலாறு**

தொழில் திணைக்களத்தின் ஆரம்பம், இலங்கையில் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்காக காலனித்துவ ஆட்சியாளர்களால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட இந்திய குடிபெயர் தொழிலாளர் களின் நலன்புரிக்காக 1923 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க இந்தியர் குடிபெயர் தொழில் கட்டளைச்சட்டத்தின் நியதிகளுக்கமைவாக இந்திய குடிபெயர் தொழில் கட்டுபாட்டாளர் திணைக்களத்தின் உருவாக்கத்தைக் குறித்து நிற்கின்றது. ஊழியர் படையில் உள்நாட்டின் பங்களிப்பு மற்றும் அவர்களின் நலன்புரியின் அவசியம் இனங்காணப்பட்டதுடன் தொழில் திணைக்களமானது, இலங்கை உழைக்கும் மக்களின் நலன்புரி மற்றும் பாதுகாப்பினைக் கவனித்திருந்த மிகவும் முக்கியமான தாபனமாகவும், அதேபோன்று தொழில்தருநர், பணியாளரின் ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துவதற்கான தாபனமாகவும் மாறியிருந்தது.

**தொலைநோக்கு**

சர்வதேசரீதியில் போட்டித்தன்மையான பொருளாதாரமொன்றிற்காக நிரந்தரமான தொழிற்றுறை அமைதியுடன்கூடிய நாடொன்று.

**செயற்பணி**

பெறப்பட்ட தொழிற்றுறை அமைதிக்குள் சீரிய வேலைச் சூழலொன்றைத் தாபிப்பதனூடாக இலங்கையின் அபிவிருத்திச் செயன்முறைக்கு பங்களிபபுச் செய்தல்.

**தற்போதைய நிலை**

இத்திணைக்களமானது, 1923 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து கடந்த 90 ஆண்டு காலப்பகுதியில் இத்துறையுடன் தொடர்புபடுகின்ற இலங்கை சட்டவாக்க மன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்ட 50 சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற செயன்முறையில் ஈடுபடுகின்றது. திணைக்களத்தின் செயற்பாடுகள் தேசிய பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்களிப்பினை விரிவுபடுத்திப் பரந்திருப்பதுடன், தற்போதைய பதவியணியின் எண்ணிக்கை 2169 ஆகும். திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துடன் 13 பிரிவுகள் இணைந்து தொழிற்படுகின்றன.

பிரதேச நிருவாகத்தின் கீழ், 11 வலைய தொழில் அலுவலகங்கள், 39 மாவட்ட தொழில் அலுவலகங்கள், 18 உப தொழில் அலுவலகங்கள் மற்றும் 10 மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியிலாளர்கள் அலுவலகங்கள் தொழிற்படுகின்றன.

# தொழிற்றுறை அமைதி


30 ஆண்டு யுத்தத்தின் பின்னர் துரிதமான பொருளாதார அபிவிருத்தியொன்றை எதிர்பார்க்கின்ற இலங்கைச் சமூகம் சிறந்த தொழிற்றுறை அமைதியைக் கொண்டிருத்தலானது தெரிவிக்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்கு மிகவும் முக்கியமானதாகும். பொருளாதார அபிவிருத்தியை அடைவதற்கு மிகவும் முக்கியமான காரணிகள் தொழில்தருநர், பணியாளர் சமூகம் வேலைத்தலத்தில் சுமுகமான சூழலைப் பேணி, நாளாந்த செயற்பாடுகளை பணி நிறுத்தங்கள், பிணக்குகள் இன்றி ஆற்றுவதாகும்.


**தொழில் பரிசோதனைகள்**

நாட்டில் சக்திமிக்க ஊழியர் படையை உருவாக்குவதற்காக தொழில் பரிசோதனைகளினூடாக பாரிய ஆதரவொன்று வழங்கப்படுகின்றது.

நிலையான தொழில் பரிசோதனைகள், தாபனங்களில் தொழிற்றுறை அமைதியை அதிகரிப்பதற்கும், அதனூடாக நாட்டில் உற்பத்தித்திறன் ஒட்டுமொத்தத்தில் உயர்வடைவதற்கும் ஆதரவளிக்கின்றன. அதேபோன்று, தொழில் பரிசோதனைகள் இடம்பெறாத நாடொன்றில் தொழில் பிணக்குகள் மற்றும் குறைந்த உற்பத்தித்திறன் இடம்பெறுகின்ற நிலைமையொன்றையும் ஏற்படுத்துகின்றது.

கீழே தரப்பட்டுள்ள வரைபடங்கள், தொழில் திணைக்களத்தின் அலுவலர்களினால் ஆற்றப்பட்ட தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கையையும், கடந்த ஆண்டு காலப்பகுதியில் தெரிவிக்கப் பட்டுள்ள கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கையையும் விபரிக்கின்றன.




தெரிவிக்கப்பட்ட கைத்தொழில் பிணக்குகளின் எண்ணிக்கை இந்த ஆண்டும் தொடர்ந்தும் குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிந்தது. இந்த வகையில் பிணக்குகளைக் குறைப்பதற்கு இட்டுச்செல்கின்ற பலமான காரணிகள், தொழில் பரிசோதனைச் செயற்பாட்டினைப் பலப்படுத்துதல், திணைக்களத்தின் சமூக சம்பாஷணை மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுப் பிரிவின் மூலம் தாபன மட்டத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியமை அத்துடன் திணைக்களத்தின் ஏனைய பல்வேறு பிரிவுகளினால் ஊடகத்தினூடாக உருவாக்கப்பட்ட விழிப்புணர்வு என்பவையாகும்.

தாபன மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் பரிசோதனைகளின் தரம் பற்றி இத் திணைக்களம் அக்கறைப்படுகின்றது. இந்தக் குறிக்கோளுடன், திணைக்களமானது, வலைய மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துகின்றது. அத்தகைய 6 முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை ஆய்வாண்டு காலப்பகுதியில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த கூட்டங்களில் தொழில் அலுவலர்கள் மூலமான பரிசோதனைகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றினைத் திருத்துவதற்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

### பணி நிறுத்தம்

ஆய்வாண்டு காலப்பகுதியில் தனியார் துறை, அரசுசார் துறை தாபனங்களில் 42 பணி நிறுத்தங்கள் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. அவையாவன:

| | | |
|---|---|---|
| தோட்டத்துறை | - | 22, |
| தோட்டத்துறை அல்லாதவை | - | 18, |
| அரசுசார் துறை | - | 02 |

இந்த அனைத்து பணி நிறுத்தங்களிலும் 11,119 வேலையாளர்கள் பங்குபற்றியிருந்ததுடன், 80,423 மனித உழைப்பு நாட்கள் இழக்கப்பட்டிருந்தன.

### பிணக்குகளைத் தீர்த்தல்

ஆய்வாண்டு காலப்பகுதியில் கைத்தொழில் பிணக்குகள் உள்ளடங்கலாக 16,320 முறைப்பாடுகள் திணைக்களத்தின் மாவட்ட, உப தொழில் அலுவலகங்களின் வலையமைப்பிற்கு தெரிவிக்கப் பட்டுள்ளன. ஆண்டின் ஆரம்பத்தில் இருந்திருந்த 8,881 முறைப்பாடுகள் உள்ளடங்கலாக 16,605 முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

விசேட புலன்விசாரணைப் பிரிவானது, அதிமேதகு சனாதிபதி , கௌரவ தொழில் அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரினூடாக தொழில் ஆணையாளர் அதிபதிக்கு தெரிவிக்கப்படுகின்ற பொது மக்களின் விசேட முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கும், சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கின்றது. இந்த ஆண்டு காலப்பகுதியில் இப்பிரிவு 122 விசாரணைகளை நடத்தியுள்ளது. இந்த விசாரணைகளினூடாக, ஊழியர் சேமலாப நிதிய உதவுதொகைகளின் நிலுவையாக 28,012,437.11 ரூபா தொகையும், ஏனைய நியதிச்சட்ட நிலுவைகளாக 5,814,149.90 ரூபா தொகையும், கணிக்கப்பட்டுள்ளது.

**சட்டச் செயற்பாடுகள்**

கடந்த சில ஆண்டுகாலப்பகுதியில் இத்திணைக்களத்தின் சட்டச் செயற்பாடுகளை கவனத்திலெடுக் கின்றபோது, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. அண்மைய 3 ஆண்டுகளை மீளாய்கின்றபோது, 2011 ஆம் ஆண்டில் பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் 4,092 வழக்குகளைத் தொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் 2371 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகளில் பெரும்பாலானவை, இலங்கை போக்குவரத்துச் சபையின் பணியாளர்களுக்கு பணிக்கொடையை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்தவையாகும். ஊழியர் சேமலாப நிதிய உதவுதொகைகளில் நிலுவைகளை அறவிடுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது.

SC (FR) 241/2008 ஆம் இலக்க மேல் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவாக, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ஊழியர் சேமலாப நிதிய உதவுதொகையின் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்று காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த வழக்குகள் 2013 ஆம் ஆண்டளவில் உயர்வடைந்து அதன் எண்ணிக்கை 3415 ஆக இருந்தது.

**இலங்கை போக்குவரத்துச் சபையின் பணிக்கொடைக் கொடுப்பனவு**

இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் நாடளாவியரீதியிலிருக் கின்ற அனைத்து டிப்போக்களிலும் சேவையாற்றியதன் பின்னர் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு சில ஆண்டுகளுக்கு வழங்கப்படாத பணிக்கொடைக் கொடுப்பனவு பற்றி இத்திணைக்களத்தித்திற்கு அதிகளவு எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்தின் மேலதிகத்தைப் பயன்படுத்தி இந்த நிலுவைகளைச் செலுத்துகின்ற இந்தப் பணி இலக்கினை குறித்தொதுக்கியதன் விளைவாக, தொழில் திணைக்களத்திற்கு வேலைப்பளு மிகவும் அதிகமான தொரு ஆண்டாக 2013 ஆம் ஆண்டு வந்திருந்தது.

இதன்படி, கௌரவ தொழில், தொழில் உறவுகள் அமைச்சரின் வழிகாட்டலின் கீழ், தொழிற்றுறை தொடர்புகள் பிரிவு, வினைப்படுத்தல் பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் தலைமை அலுவலகத்தின் ஏனைய பிரிவுகளின் ஒத்தழைப்புடன், திணைக்களத்தின் பிராந்திய அலுவலக வலையமைப்பின் ஈடுபாட்டுடன் இத்திணைக்களத்திற்கு 4037 வேலையாளர்களுக்கு 1,965,790,382.70 ரூபா தொகையினைச் செலுத்த முடிந்திருந்தது.

## சம்பளங்கள் மற்றும் சேவை நிபந்தனைகள்

இத்திணைக்களமானது, தனியார் துறையில் ஈடுபட்டுள்ளோரின் சேவை நிபந்தனைகள் மற்றும் தொழில் பாதுகாப்பிலும், நலன்புரியிலும் பாதிப்பை ஏற்படுத்துவது தொடர்பில் நியமங்களை வகுத்தமைப்பதில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச்சட்டம் / சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுப்பதில் ஈடுபடுவதுடன், மேற்பார்வையிடுவதனையும் மேற்கொள்கின்றது.

01. 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்.

02. 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலகப் பணியாளர்கள் (தொழில் மற்றும் ஊதிய ஒழுங்கமைப்பு) சட்டம்.

03. 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம்

**சம்பளச் சபைகள்**

தற்போது இலங்கையில் 44 சம்பளச் சபைகள் தொழிற்படுகின்றன. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூறப்பட்ட சபைகள் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- கடந்த காலப்பகுதியில் மலர்கள், அலங்காரத் தாவரங்கள், மரக்கறிகள் மற்றும் பழப் பயிர்ச் செய்கையும், ஏற்றுமதித் தொழிலுக்குமான சம்பளச் சபைகளைத் தாபித்ததன் பின்னர் ஆகக்குறைந்த சம்பளங்களைத் தீர்மானித்ததன் பேரில் சேவைகளை வகைப்படுத்துதல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- அதேபோன்று, தனியார் கல்விசார் நிறுவகங்களின் பணியாளர்களுக்காக புதிய சம்பளச் சபைகளைத் தாபிப்பதற்கான தகவல்களைச் சேகரித்தல் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன், உரிய துறையில் நிபுணத்துவ அறிவுடன்கூடியவர்களின் பங்கேற்புடன் பயிற்சிப்பட்டறையொன்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

- பதவிக் காலம் முடிவடைந்திருந்தவர்களின் இடத்திற்காக 19 சம்பளச் சபைகளுக்கு நியமனங்கள் செய்யப்பட்டிருந்ததுடன், 06 சம்பளச் சபைகளில், மரணமடைந்த மற்றும் இராஜினாமாச் செய்திருந்த அதேபோன்று வெளிநாடு சென்றிருந்த அங்கத்தவர்களின் இடத்திற்கு புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

- ஆடை உற்பத்தித் தொழில் மற்றும் அச்சடித்தல் தொழில் போன்றவற்றில் புதிய சேவை குழுமங்களை இனங்காண்பதற்காக தகவல்களைச் சேகரிப்பது 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி, 2014 இற்கு இணையாக வறகாபொல துல்கிரிய பிரதேசத்தில் தொழில் நியமங்கள் தொடர்பில் தொழில்தருநர், பணியாளர் தரப்பினரிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட மொன்று நடத்தப்பட்டிருந்தது.

- சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம், கடை மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டம் அத்துடன் வரவுசெலவுத்திட்ட நிவாரணச் சட்டம் தொடர்பில் தொழில்தருநர், பணியாளர் தரப்பினர்களால் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்களினால் விசாரணைகளுக்காக அனுப்பப்பட்டவைக்கான தெளிவுபடுத்தல் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்தது.

**தனியார் துறை பணியாளர்களின் ஆகக்குறைந்த சம்பள மட்டத்தை அதிகரித்தல்**

சம்பளச் சபைகளினால் உள்ளடக்கப்பட்டுள்ள வேலையாளர்களின் ஆகக்குறைந்த சம்பளங்களை அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 18 சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த சம்பளங்கள் இதே ஆண்டில் அதிகரிக்கப்பட்டிருந்தன. இந்த 18 சபைகள் தொடர்பான தீர்மானங்கள் 2013.01.01 ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் வெளியிடப் பட்டிருந்தன. வேறுபிற 20 சம்பளச் சபைகளின் ஆகக்குறைந்த சம்பளங்கள் 2013 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன், இந்தத் தீர்மானங்களும் இதே ஆண்டில் வெளியிப்படப்பட்டிருந்தன.


# சமூகப் பாதுகாப்பு

ஊழியர் சேமலாப நிதியமானது, ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற தனியார் துறை மற்றும் கூட்டுத்தாபனத் துறைப் பணியாளர்களின் ஓய்வு வாழ்க்கைக்கு சிறந்த ஆதரவாக வரும் என்ற நோக்குடன் முக்கியமான சமூகப் பாதுகாப்புத் திட்டமொன்றாக 1958 யூன் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டிருந்தது.

## உதவுதொகையினைச் சேகரித்தல்

இச்சட்டத்தினால் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற அனைத்துப் பணியாளர்கள் சார்பிலான எந்தவொரு மாதம் தொடர்பிலான உதவுதொகையும் உரிய தொழில்தருநரினால் மத்திய வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். கீழேயுள்ள வரைபடம், கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் உதவு தொகையினைச் சேகரிப்பதிலிருந்த முன்னேற்றத்தை விபரிக்கின்றது.

| ஆண்டு | உதவுதொகை. ரூபா .மில்லியன் |
|---|---|
| 2009 | 48,712 |
| 2010 | 54,796 |
| 2011 | 61,879 |
| 2012 | 70,157 |
| 2013 | 77,335 |




## வரவேண்டிய உதவுதொகை நிலுவையைத் தன்னியக்க முறையில் அறவிடுதல்

தொழில்தருநர்களினால் புறக்கணிக்கப்படுகின்ற உதவுதொகைகளை அறவிடுவதனை மேற்பார்வை யிடுதல் தொடர்பான அறிக்கைகளை கணினிமயப்படுத்தலும், தன்னியக்கமாக்குதலும் இந்த ஆண்டு காலப்பகுதியில் பரீட்சார்த்தரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த முறைமையின் கீழ் தற்போது 20 மாவட்ட தொழில் அலுவலகங்களில் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## உதவுதொகைக் கொடுப்பனவின் தன்னியக்கமுறை

வங்கிக் கணக்குகளினூடாக தன்னியக்க முறையில் ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகை களைச் செலுத்துவதற்கு தொழில்நருநர்களை இயலச்செய்வதற்கு தேவையான தொழில்நுணுக்க வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒழுங்குவிதிகளை வகுத்தமைத்தலும் இந்த ஆண்டு காலப் பகுதியில் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. உரிய செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | பதிவு செய்யப்பட்ட வற்றின் எண்ணிக்கை | இலைத்திரனியல் முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டவற்றின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|
| செயற்படும் தாபனங்களின் எண்ணிக்கை | 68,140 | 1,718 | 3% |
| செயற்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 2,337,532 | 799,928 | 34% |

**தனியார் சேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுதல்**

ஊழியர் சேமலாப நிதியத்தின் நிருவாக தொழிற்பாடுகளுக்கு மேலதிகமாக, திணைக்களமானது, நாடளாவியரீதியில் 177 தாபனங்களில் தனியார் சேமலாப நிதியங்களை மேற்பார்வையிடுவதில் ஈடுபடுகின்றது.

# தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

இத்திணைக்களமானது, வேலைத்தலங்களில் விபத்துக்கள், தீங்குகள் மற்றும் தொழில்சார் நோய்கள், தொழிலுடன் இணைந்துள்ள மோசமான சுகாதார நிலைமைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. விபத்துக்கள், தீங்குகள் அற்ற வேலைத்தலம் மற்றும் தொழிற்றுறை சுகாதாரத்தைப் பேணிப்பாதுகாக்கின்றவிடத்தும், உற்பத்தி செய்கின்ற பொருட்கள் மற்றும் வழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தைப் பேணுகின்றவிடத்தும் உற்பத்தித்திறன் அதிகரிப்பினைப் பெறுபேறாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பது இரகசியமானதொன்றல்ல. பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பானது, 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க கைத்தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி சட்டத் தேவைப்பாடொன்றாகும்.

### உலக பாதுகாப்புத் தினம்

உலக பாதுகாப்புத் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்பிரல் 28 ஆம் திகதி கொண்டாடப்படுவதுடன், இந்த ஆண்டு தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ காமினி லொகுகே அவர்களின் தலைமையில் பொறலஸ்கமுவவில் ‘கியன்ங்நம்’ வேலைக்களத்தில் பிரதான நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதத்தின் இரண்டாவது வாரத்தின்போது நடத்தப்படுகின்றது. இந்த வாரத்தின்போது 2013 ஆம் ஆண்டில் முறைசார் மற்றும் முறைசாரா துறை இரண்டினையும் உள்ளடக்கி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

- களுத்துறை மாவட்டத்தில் கள்ளுச் சீவும் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.
- களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்.
- தனியார் தாபனங்களின் பாதுகாப்பு அலுவலர்களுக்கான நிகழ்ச்சித்திதிட்டம் மற்றும் பதாதை சித்திரப் போட்டிக்கு விருதுகளை வழங்குதல்.
- போகவந்தலாவை தேயிலைத் தொழிற்சாலை பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்.
- மீரிகம பிரதேசத்தில் பாறை சுரங்கத்தின் பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.
- கொழும்பு ஹலதாரி ஹொட்டலில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் கருத்தரங்கு.

- கட்டுநாயகா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையத்தில் ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

- குளியாப்பிட்டி தொழில்நுட்பக் கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

**சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்**

2013 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் விதிகளை மீறியுள்ள 26 தொழில் தருநர்களுக்கெதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 18 இற்கு 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தீர்ப்புகளும் வழங்க முடிந்திருந்தது.

**தொழில்சார் சுகாதாரம்**

தொழில்சார் நோய்களினால் பாதிக்கப்படக்கூடிய வேலைச் சூழலைப் பரிசோதிப்பதற்காக சூழல் அளவீட்டினை இத்திணைக்களம் பயன்படுத்துகின்றது. இந்நோக்கத்திற்காக திணைக்களத்திட மிருக்கின்ற அதி நவீன அளவீட்டு உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தப் பரிசோதனைகள் முழுவதும் இலவசமாகச் செய்யப்படுகின்றன. சூழலை அளவிடுதலானது, வேலைத்தலங்களிலும், மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுகூடங்களிலும் செய்யப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, தொழில்சார் நோய்கள் இருக்கின்றதா அல்லது அறிகுறிகள் இருக்கின்றதா என்பதை இனங்காண்பதற்கு ஆரம்ப நிலையிலேயே பல்வேறு உடல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படு கின்றன.

இந்த ஆண்டு காலப்பகுதியில் பின்வருவன மேற்கொள்ளப்பட்டிருந்தன:

- 157 சுவாசப்பை தொழிற்பாட்டு பரிசோதனைகள்,
- 105 செவிப்புலன் பரிசோதனைகள்,
- 230 தலத்திலேயேயான சூழல்சார் அளவீடுகள் மற்றும்
- 210 ஆய்வுகூட சூழல்சார் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# விசேட துறைகள்

பெண் பணியாளர்களினால் தேசிய பொருளாரத்திற்கு விசேட பங்களிப்புச் செய்யப்படுகின்றது. அவர்களின் சுகாதாரத்தை கவனிப்பதும், அவர்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்குவதும் தொழில் திணைக்களத்தின் பொறுப்பாகும். அதேபோன்று, நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்பதற்கு முன்னோடிகளாகத் திகழ்கின்ற சிறுவர் பரம்பரையின் பாதுகாப்பினைக் காக்கும் நோக்கில் சிறுவர் ஊழியத்தை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் திணைக்களம் ஈடுபடுகின்றது. தொழில் திணைக்களம், சிறுவரின் உழைக்கும் வயதினைத் தீர்மானிப்பதிலும், ஆபத்தான, தீங்கிழைக்கின்ற தொழில்களில் சிறுவர்களை ஈடுபடுத்துவதனைத் தடுப்பதிலும், அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதிலும், அத்தகைய தொழில்தருநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுப்பதிலும் ஈடுபடுகின்றது.

### சர்வதேச மகளீர் தினம்

சர்வதேச மகளீர் தினத்தை நினைவுகூருகையில், 2013 மார்ச் 08 ஆம் திகதியன்று பிலியந்தலை ‘சுசிறி’ வரவேற்பு மண்டபத்தில் 200 பெண் பணியாளர்களுக்கு விழிப்புணர்வு ஆலோசனை நிகழ்ச்சித்திட்டமொன்றை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### பெண்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

பெருந்தோட்டத் துறையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்காக 20 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் தொழிற்சாலைகளிலிருக்கின்ற பெண் பணியாளர்களுக்காக நிறுவனம்சார்ந்த மட்டத்தில் 50 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கட்டுநாயகா, கொக்கலை மற்றும் அவிசாவெல்லை ஆகிய இடங்களிலிருக்கின்ற முதலீட்டு வலையங்களிலிருக்கின்ற பெண் பணியாளர்களுக்காக 16 ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

### பெண் பணியாளர்கள் பேரிலான முறைப்பாடுகளும், விசாரணைகளும்

பெண் வேலையாளர்களின் பிரச்சனைகள் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள், மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து விசாரிக்கப்பட்டு, தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப் பட்டிருந்தன. நிறுவனங்களில் இரவு நேரங்களில் பெண்களை பணியில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு மாவட்ட அலுவலகங்களுடன் இணைந்து 116 பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. இரவு நேரங்களில் பெண்களை பணியில் ஈடுபடுத்துவதற்கு 315 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மகப்பேற்று நன்மைகள் வழங்கப்படமை பற்றியும், ஏனைய சேவை நிபந்தனைகளுடன் இணங்காமை பற்றியும் 11 முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன், தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன.

### சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சிறுவர் தொழிலுக்கெதிரான தினம்

சிறுவர் தொழிலுக்கெதிரான ஊர்வலமானது, 700 சிறுவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கேற்புடன் 2013 ஒக்டோபர் 01 ஆம் திகதி குருவிட்டை இரத்தினபுரி கோட்டை மைதானத்தில் இடம்பெற்றிருந்ததுடன், அதன் பின்னர் சிறுவர்களின் உரைகள், நாடகங்களை உள்ளடக்கிய வைபவமொன்றும் இடம்பெற்றிருந்தது. அத்துடன் சர்வதேச சிறுவர் தொழிலுக்கெதிரான தினத்தை யொட்டி சிறுவர் ஊழியத்தை இல்லாதொழிப்பது தொடர்பான ஆலோசனை நிகழ்ச்சித்திட்ட மொன்றும் தேசிய பயிலுநர், தொழில்சார் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து நடத்தப்பட்டது.

### சிறுவர் ஊழியம் பற்றிய முறைப்பாடுகள் மீதான விசாரணைகள்

தொழில் திணைக்களத்தின் பெண்கள், சிறுவர் பிரிவு, பல்வேறு தனிப்பட்டவர்களிடமிருந்தும், பெயர் குறிப்பிடுகின்ற நிறுவனங்களிடமிருந்தும் அத்துடன், பெண்கள், சிறுவர் பணியகத்தினூடாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினூடாக அனாமதேயமாக பெறப்படுகின்ற சிறுவர் ஊழியம் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதிலும், தொழில்தருநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதிலும் ஈடுபடுகின்றது. இதன்படி,

- திணைக்களத்தால் பெறப்பட்ட முறைப்பாடுகள் - 232
- சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டவற்றின் எண்ணிக்கை - 01
- சட்ட நடவடிக்கை பூர்த்தியாகாது நிலுவையாக இருப்பவற்றின் எண்ணிக்கை - 04
- சிறுவர் ஊழியம் பற்றி வெளிப்படுத்தப்படாதவற்றின் எண்ணிக்கை - 08
- விசாரணையின் கீழ் இருப்பவற்றின் எண்ணிக்கை - 19

### சிறுவர் ஊழியத்தின் மோசமான வடிவங்களை இல்லாதொழித்தல்

இத்திணைக்களமானது, தீங்கிழைக்கின்ற தொழிலாக இனங்காணப்பட்ட தொழிலில் 14 முதல் 18 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களை ஈடுபடுத்துவதை இல்லாதொழிப்பதற்கான வழிகாட்டல் நியதிகளின் படி நடவடிக்கை எடுக்கின்றது. இந்த விடயத்தின் கீழ், தொழிற்பாட்டுக் குழுவின் 2 கூட்டங்கள் இந்த ஆண்டில் நடத்தப்பட்டிருந்தன. இதேபோன்று, சமூகத் தரப்பினர்களுக்கு 20 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்கான (பொலிஸ், நன்னடத்தை மற்றும் தொழில் அலுவலர்கள்) 04 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன. தீங்கிழைக்கின்ற தொழிலில் 14 முதல் 18 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் 10 விசேட பரிசோதனை களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, “අනර්ථකාරී ළමා ශ්‍රම යෙදවුම හා ළමා ශ්‍රමය” (தீங்கிழைக்கும் தொழிலில் மற்றும் சிறுவர் ஊழியத்தில் சிறுவர்கள் ஈடுபடுதல்) என்ற கைந்நூலினை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# பொது நிருவாகம்

தொழில்தருநர் – பணியாளர் சமூகத்திற்கு வளமிக்க சேவையொன்றை வழங்கும் நோக்கில் திணைக்களத்தின் பௌதீக, மனித மற்றும் நிதி வளங்களை பயனுள்ள வகையில் ஒழுங்கமைப்பதும், தொடர்ந்தும் பேணுவதும் அவசியமானதாகும்.

**மனித வளங்கள்**

2013 ஆம் ஆண்டு காலப்பகுதியின் இறுதியில் தொழில் திணைக்களத்தில் வெவ்வேறு பதவிகளிலிருக்கின்ற அலுவலர்களின் எண்ணிக்கை 2,169 ஆக இருந்திருந்தது. கடந்த சில ஆண்டுகளின்போது திணைக்களத்திற்குச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் வெளியேறியவர்கள் தொடர்பான விபரங்கள் புள்ளிவிபரக் கையேட்டில் தரப்பட்டுள்ளன. இந்த ஆண்டு காலப்பகுதியில் சுற்றுபங்களா பராமரிப்பாளர் ஒருவர், சாரதிகள் 04 மற்றும் அலுவலக உதவியாளர்கள் 33 பேரைச் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. திணைக்கள அலுவலர்களின் இயலளவினை வளர்ப்பதற்காக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் இந்த புள்ளிவிபரக் கையேட்டில் விபரிக்கப்படுகின்றன.

**பௌதீக வளங்களின் அபிவிருத்தி**

உத்தேசிக்கப்பட்ட 36 தளங்களைக் கொண்ட ‘‘மெஹேவர பியஸ’’ கட்டடத்தின் ‘பைலிங்’ வேலை நிறைவுசெய்யப்பட்டுள்ளது. ‘‘மெஹேவர பியஸ’’ கட்டடத்தின் பிரதான நிருமாணத்திற்கான ஒப்பந்தகாரர் 2013 ஆம் அண்டின் இறுதிப் பகுதியில் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன், நிருமாண வேலை நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு காலப்பகுதியில் செலவீனம் 451.4 மில்லியன் ரூபாவாகும். இதற்கு மேலதிகமாக, தற்போது நிருமாணிக்கப்படுகின்ற பிரதேச அலுவலகங்களின் கட்டடங்களுக்காக 2013 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்ட செலவீனம் உறப்பட்டிருந்தது.

| அலுவலகம் | மொத்தச் செலவீனம் ரூபா.மில். |
|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 18 |
| 2. அவிசாவெல்லை | 16 |
| 3. முல்லைத்தீவு | 13 |
| 4. பொலநறுவை | 12.5 |
| 5. நீர்கொழும்பு | 22 |
| 6. பெலியத்தை | 13 |
| 7. கிளிநொச்சி | 10 |

**நூலகம் மற்றும் தொழில் அரும்பொருளகம்**

தொழில் திணைக்களத்துடனாக தொழிற்றுறை தொடர்பான தாபனங்களின் தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் வகையில், விடயம் சார்ந்த வகையில் தகவல்களைச் சேகரிப்பது இத்திணைக்களத்தின் நூலகத்தினூடாக ஆற்றப்பட்ட சேவைகளில் முதலிடத்தில் இருப்பதுடன், தேவையானபோது அவற்றைப் பரப்புவதும், அதனூடாக தாபனங்களின் பணியாளர்களுக்கும், பொது மக்களுக்கும் அறிவினையும், தகவல்களையும் வழங்குகின்றது. அதேபோன்று தொழில் திணைக்களத்தினால் பேணப்படுகின்ற தொழில் அரும்பொருளகமானது, தொழிற்றுறையின் பரிணாம வளர்ச்சியை மனதைக் கவரும்வகையில் காட்சிப்படுத்துகின்றது. மேலும், தொழிற்றுறையுடன் தொடர்புபட்ட பழைய தொழில் கட்டளைச்சட்டங்கள், சட்டங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சேகரிப்பதுடன், அவற்றைப் பேணிப்பாதுகாப்பதுவும் தொழில் அரும்பொருளகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**வெளியீடுகள் மற்றும் ஆய்வுகள்**

நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அத்தகைய தரவுகளைப் பயன்படுத்துகின்ற ஏனையவர்களுக்கும் நாளதுவரைப்படுத்தப்பட்ட, நம்பிக்கையான தரவுகளை வழங்கும் நோக்கில் திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கெடுப்புக்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தன:

- தொழில் பற்றிய வருடாந்த கணக்கெடுப்பு.
- சராசரி உழைப்பு மற்றும் வேலையாற்றியுள்ள மணித்தியாலங்களின் எண்ணிக்கை தொடர்பான கணக்கெடுப்பு.

## புள்ளிவிபரக் கையேடு

**கைத்தொழில் தொடர்புகள் பிரிவு**

| | | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| **கைத்தொழில் பிணக்குகள் பற்றிய புள்ளிவிபரங்கள்** | | | | | |
| தெரிவிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | | 3,948 | 3,756 | 3,702 | 3,204 |
| தீர்க்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | | 3,462 | 3,384 | 3,695 | 3,077 |
| பதிவுசெய்யப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | | 42 | 66 | 43 | 34 |
| **தொழிற் சங்கங்கள்** | | | | | |
| பதிவுசெய்யப்பட்ட தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள் | | 107 | 76 | 114 | 108 |
| இரத்துச்செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள்/சம்மேளனங்கள் | | 106 | 38 | 02 | 114 |
| **கைத்தொழில் நீதிமன்றங்கள்** | | | | | |
| கட்டாய நடுத்தீர்ப்பிற்கு விடப்பட்டவை | | 24 | 69 | 43 | 49 |
| நடுத்தீர்ப்பு கூறப்பட்டவை | | 29 | 35 | 26 | 35 |
| **பணி நிறுத்தம் பற்றிய புள்ளிவிபரங்கள்** | | | | | |
| தெரிவிக்கப்பட்ட பணி நிறுத்தம் | தோட்டங்கள் | 09 | 14 | 14 | 22 |
| | தாபனங்கள் | 06 | 07 | 20 | 20 |
| பங்குபற்றிய வேலையாளர்களின் எண்ணிக்கை | தோட்டங்கள் | 3,185 | 2,713 | 4,338 | 5,031 |
| | தாபனங்கள் | 1,923 | 3,742 | 5,626 | 6,088 |
| இழக்கப்பட்ட உழைப்பு நாட்கள் | தோட்டங்கள் | 23,037 | 9,877 | 25,043 | 41,669 |
| | தாபனங்கள் | 2,034 | 15,543 | 10,774 | 38,754 |
| **தொழில் முடிவுறுத்தல் பிரிவின் செயற்பாடுகள்** | | | | | |
| பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 110 | 86 | 92 | 134 |
| தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 175 | 111 | 143 | 112 |
| தொழில் முடிவுறுத்தலுக்காக அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | 25 | 29 | 31 | 41 |
| **சமூகக் கலந்துரையாடல் மீதான நிகழ்ச்சித்திட்டம்** | | | | | |
| சமூகக் கலந்துரையாடல் அலகினால் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 86 | 98 | 153 | 187 |
| | சமுகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 4,041 | 4,800 | 4,751 | 6,560 |
| மாவட்ட, உப அலுவலகங்களினால் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 100 | 124 | 225 | 214 |
| | சமுகமளித்த வேலையாளர்களின் எண்ணிக்கை | 3,496 | 4,478 | 7,902 | 7,768 |

2013.12.31 இல் தொழிற்படுகின்ற தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை - 2,145

2013.12.31 இல் தொழிற்படுகின்ற தொழிற் சங்க சம்மேளனங்களின் எண்ணிக்கை - 26

**சட்டத்தை வினைப்படுத்தும் பிரிவு**

| சட்டம் | தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2013 |
| 01. பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டம் | 2,459 | 4,092 | 3,404 | 2,371 |
| 02. கைத்தொழில் பிணக்குகள் சட்டம் | 59 | 72 | 77 | 126 |
| 03. தொழில் முடிவுறுத்தல் சட்டம் | 39 | 65 | 59 | 58 |
| 04. சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் | 166 | 238 | 290 | 203 |
| 05. கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | 51 | 80 | 132 | 112 |
| 06. மகப்பேற்று நன்மைகள் சட்டம் | - | 01 | 02 | 05 |
| 07. பெண்கள், இளம் நபர்கள் மற்றும் சிறுவர் தொழில் சட்டம் | 15 | 05 | 10 | 07 |
| 08. ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் | 1,484 | 3,483 | 3,210 | 3,415 |
| 09. தொழில் நியாயாசபைக் கட்டளைகள் | 134 | 153 | 165 | 144 |
| 10. வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டம் | - | 54 | 134 | 22 |
| 11. அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியம் | - | - | 07 | 01 |

**விசேட புலனாய்வுப் பிரிவு**

| | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | 401 | 241 | 264 | 122 |
| கணிக்கப்பட்ட ஊ.சே.நிதியத்தின் வரவேண்டிய நிலுவைத் தொகை (ரூபா.ஆயிரத்தில்) | 31,498 | 153,483 | 313,770 | 28,012 |
| கணிக்கப்பட்ட நியதிச்சட்டப் பணங்களின் பெறுமதி (ரூபா.ஆயிரத்தில்) | 10,798 | 12,295 | 40,831 | 5,814 |

**ஊழியர் சேமலாபப் பிரிவு**

| | 2010.12.31 வரை | 2011.12.31 வரை | 2012.12.31 வரை | 2013.12.31 வரை |
|---|---|---|---|---|
| அங்கத்தவர்கள் கணக்குகளின் மொத்தம் | 13,412,847 | 14,162,590 | 14,559,328 | 15,203,073 |
| தொழில்தருநர்களின் மொத்த எண்ணிக்கை | 185,647 | 192,044 | 198,893 | 204,777 |
| நிதியத்தின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | 899,650 | 1,020,072 | 1,144,409 | 1,299,974 |
| செயற்பாடுடைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை (மில்லியன்) ✷ | 2.16 | 2.21 | 2.34 | 2.40 |
| செயற்பாடுடைய தொழில் தருநர்களின் எண்ணிக்கை ✷✷ | 62,295 | 64,562 | 68,140 | 69,148 |

| | | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| புதிய பதிவுகள் | பணியாளர்கள் | 719,988 | 750,941 | 127,138 | கணிக்கப்படவில்லை |
| | தொழில்தருநர்கள் | 5,234 | 6,403 | 10,060 | 7,802 |
| நன்மைக் கொடுப்பனவுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | 104,528 | 120,109 | 115,654 | 114,275 |
| | செலுத்தப்பட்ட நன்மைகள் (ரூபா.மில்லியன்) | 34,896 | 47,311 | 48,015 | 50,062 |
| உதவுதொகைகளைச் சேகரித்தமை (ரூபா மில்லியன்) | | 54,796 | 61,879 | 70,157 | 77,335 |
| ஊ.சே.நி வீடமைப்புக் கடன்கள் | அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 13,848 | 19,709 | 11,182 | 16,268 |
| | அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் பெறுமதி (ரூபா மில்லியன்) | 4,512 | 6,253 | 3,951 | 6,914 |

✷ ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் உதவித்தொகை செலுத்தப்பட்டுள்ள அங்கத்தவர்கள் கணக்குகள்.

✷✷ ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது ஒருமுறையேனும் பணியாளர்கள் சார்பாக உதவித் தொகைகளைச் செலுத்தியுள்ள தொழில்தருநர்கள்.

தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு

| | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளின் மொத்த எண்ணிக்கை | 20,053 | 20,971 | 22,459 | 23,974 |
| செய்யப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 4,482 | 4,749 | 6,700 | 6,372 |
| பரிசோதகர்களின் எண்ணிக்கை (பொறியியலாளர்கள்) | 28 | 27 | 28 | 28 |
| திட்டங்களுக்கான அங்கீகாரம் | 104 | 122 | 106 | 97 |
| விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் | 265 | 294 | 229 | 218 |

தொழில்சார் சுகாதாரப் பிரிவு

| | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| தொழிற்சாலை பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1,042 | 220 | 410 | 352 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 186 | 193 | 137 | 190 |

திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

| | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| பதவிநிலை அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 8 | 22 | 4 | 14 |
| முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 14 | 8 | 17 |
| கணினிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 33 | 16 | 33 | - |
| ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 2 | 2 | 2 | 2 |
| பட்டப் பின்படிப்பு பாடநெறிகள் | 8 | 26 | 20 | 41 |
| வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 16 | 37 | 57 | 23 |
| முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் | 8 | 7 | 5 | 6 |
| தொழில் ஆய்வுகள் | - | 13 | 19 | - |

**நிதிப் பிரிவு**

| | | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | ஏற்பாடு (ரூபா) | 982,340,000.00 | 967,407,000.00 | 1,100,630,000 |
| | செலவினம் (ரூபா) | 970,274,622.00 | 953,894,760.00 | 1,016,129,728 |
| மூலதனச் செலவினம் | ஏற்பாடு (ரூபா) | 371,936,197.00 | 372,365,000.00 | 760,275,000 |
| | செலவினம் (ரூபா) | 333,633,002.00 | 299,512,890.00 | 732,936,934 |

**தாபனங்கள் பிரிவு**

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| **ஆண்டின் ஆரம்பத்தில் மொத்தப் பதவியணி** | | | |
| • திணைக்களத்தினால் புதிய ஆட்சேர்ப்புக்கள் | 2,184 | 2,271 | 2,219 |
| • இணைந்த சேவையின் புதிய நியமனங்களாகச் சேர்க்கப்பட்டவர்கள் | - | 23 | 1 |
| • இடமாற்றல்கள் (நிகரம்) | 159 | 30 | 37 |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக்களத்தின் பதவியினருடன் சேர்க்கப்பட்டவர்கள் | 15 | (7) | (1) |
| | - | 1 | - |
| • ஓய்வுபெற்றவர்கள் | (67) | (52) | 55 |
| • ஏனைய காரணங்களினால் தொழில் திணைக் களத்தின் பதவியினர் விலகுதல் | (20) | (47) | 32 |
| **ஆண்டின் இறுதியில் மொத்தப் பதவியணி** | 2,271 | 2,219 | 2,169 |

# பின்னிணைப்பு

## திணைக்களத்தின் நிறுவகக் கட்டமைப்பு

